## மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.07.12 சபையமர்வு அறிக்கை

2022.07.12ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும். அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தலைவர் அவர்களே கடந்த சபையமர்வின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பிரிமா மா விநியோகத்தர் தொடர்பான பிரேரணைக்கு அமைவாக அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியினை பெற்றுதரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அக்கடிதத்தில் இன்னும் சில கௌரவ உறுப்பினர்கள் கையொப்பம் இடவில்லை.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இது ஒரு அவசர பிரேரணையாகும், பிரேரணை முன்வைத்து கிட்டத்தட்ட ஒரு மாத காலமாகின்றது. வர்த்தகர்களின் கடிதமும் வழங்கப்பட்டது, கூட்டமும் நடைபெற்றது, எனினும் இன்று வரை கடிதம் அனுப்பப்படாமை அதிக கால தாமதம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடிதம் தயாரிக்கப்பட்டு விட்டது, இன்னும் சில கௌரவ உறுப்பினர்கள் கையொப்பமிடாமையின் காரணமாக அனுப்பப்படவில்லை.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அது தொடர்பில் நகரத்தில் உள்ள அனைத்து வர்த்தகர்களும் இதில் கையொப்பமிட்டுள்ளனர். அத்துடன் சபையின் உறுப்பினர் குழுவும் கையொப்பமிட்டுள்ளனர். அன்று எங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திற்கு வருகை தந்தவர்களும் கூறினார்கள். பிரீமா முகவர் தகுதியினை கூட்டுறவு சங்கத்திற்கு பெற்றுத் தருமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர். எனவே அதனை கூட்டுறவு சங்கத்திற்கு பெற்றுக் கொடுத்தால் எமக்கு பிரச்சனை இல்லை. தனிநபர் ஒருவர் தான் களஞ்சிய படுத்தி வைத்துக் கொண்டுள்ளார். இதில் பாவனையாளர்கள் பக்கத்திலும் பிரச்சினை காணப்பட்டது. இதுவரை இதனை கையொப்பமிட்டு அனுப்பவில்லை என்றால் நான் கேலிக்குள்ளாவேன். தற்போது ஒரு மாதமாகி விட்டது. எங்களுடைய செயற்பாடுகள் தாமதமாவதால் தான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இது ஒரு முக்கியமான வேலை. இன்றைய தினமாவது கையொப்பமிட்டு கடிதத்தை அனுப்பிவிட்டு எனக்கும் ஒரு பிரதியினை தாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

முறை ஒன்றை கொண்டு வரவேண்டும் என்பதற்காக தான் கடந்த சபையில் இவ்விடயம் தொடர்பாக பேசி தீர்மானமொன்றை எடுத்தோம். சாதாரணமாக உறுப்பினர் கையொப்பமிடவில்லை என்பதற்காக இன்னமும் கடிதம் அனுப்பப்படவில்லை என்று கூறினால் சரியா? மிகவும் தானே? குறித்த நபர்களுக்கு இந்நேரம் விடயம் சென்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். அத்துடன் கடந்த மாதம் எனது உரையில் 20 நிமிடங்கள் பேசியிருந்தேன் என்னிடம் ஒலிபதிவும் உள்ளது. மஸ்கெலியா நகரிலுள்ள நிறைய பிரச்சினைகளை சுட்டிக்காட்டியிருந்தேன் அது எதுவும் அறிக்கையில் வரவில்லை. அவற்றையும இணைத்துக்கொள்ளவும். பால்மா பக்கட் உடைத்து விற்பது, பெம்பர்ஸ் இற்கான விலையை மறைத்து

ஸ்டிக்கர் ஒட்டுவது, அரிசி விலை, மாவு பிரச்சினை தொடர்பாக நிறைய விடயங்களை பேசியிருந்தேன், நுகர்வோர் அதிகார சபைக்கு கடிதமனுப்பி இன்னும் வரவில்லை. அறிக்கையில் முக்கிமான விடயங்களை இணைத்துக்கொள்ளவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்கள் பேசிய நிறைய விடயங்கள் அறிக்கையில் உள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நாம் ஏற்கனவே பேசியபடி இலங்கை மின்சார சபை, வர்த்தக சங்கம், பொலிஸ் என்ற நிறுவனங்களை இணைத்து நாம் செயற்பட வேண்டும். முதலாவது கூட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்தது, அனைவரும் வந்திருந்தனர். அனைவரையும் அழைத்து பேசி அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர்களும் என்ன நினைப்பார்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சரி உடனடியாக கடிதம் அனுப்புவோம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

2022.06.13ம் திகதி சபையமர்வின் தீர்மானங்களுக்கு ஏற்ப அனுப்பப்பட்ட வேண்டிய கடிதங்களை அனுப்பி வைப்பதோடு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், கடந்த மாத சபையமர்வு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 01**

2022.06.13ம் திகதி சபையமர்வு அறிக்கை சரியென சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக எனது விசேட பிரேரணையிலே, மறேயில் இருந்து ஏகப்பட்ட புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. பேருந்து கட்டணங்கள் அதிகமாக அறவிடப்படுவது தொடர்பாக வளதலை, கெடஸ், ராஜமலை, மறே,பொரஸ் பிரதேசவாசிகளால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளன. கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக டிப்போவில் கதைத்துள்ளோம். மறேயிற்கு செல்லும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்சேவையினை வழமைப்போல சேவையில் ஈடுப்படுத்துவதாக கூறியுள்ளனர். இது தொடர்பாக குறித்த வட்டார உறுப்பினர்களும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த காலங்களில் எனக்கும் இது தொடர்பாக சில முறைப்பாடுகளை முன்வைத்திருந்தனர். பேருந்து கட்டணம் 400.00, 250.00, 280.00 என்று அறவிடப்படுகின்றதாம். பாதையும் தற்போது காபட் செய்யப்பட்டுள்ளது. 14கீ.மீ எவ்வளவு என்று விசாரித்து அங்குள்ள 05 வாகன சாரதிகளை அழைத்து அறிவித்தல் ஒன்றை வழங்கவும், அங்கிருந்து மஸ்கெலியாவிற்கு பாடசாலை மாணவர்களும் வருகின்றனர், பாவம் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக மத்தியமாகாண போக்குவரத்து அதிகாரிகளுடன் நான் பேசியுள்ளேன், கடிதமொன்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக எனது கருத்துக்களை பதிவு செய்யலாமென நினைக்கின்றேன். கட்டண அதிகரிப்பு தற்போது அதிகரிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தாலும் கூட கொவிட் காலத்தில் 50வீதமான பயணிகள் தான் பேருந்தில் பயணிக்க முடியுமென கூறப்பட்டு கட்டணம் அதிகரிக்கப்பட்டது. அதனை மறகடித்து விட்டு தற்போது அக்கட்டணத்தில் இருந்தே தற்போது கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுகின்றது. தற்போது ஒரு பேருந்தில் 03 பேருந்து பயணிகள் செல்கின்றனர். இத்துடன் முச்சக்கரவண்டி சாரதிகள் தொடர்பான விடயமொன்றையும் இணைத்துக்கொள்ள வேண்டும். இங்குள்ள கெஸ்கீபன் பிரதேசத்திற்கு செலல முன்னர் 100.00, 150.00 ரூபா அறவிடப்படும், கடந்த வாரம் ஒருவர் 1000.00ரூபா அறவிட்டுள்ளார். முச்சக்கரவண்டிகள் எடுக்கின்ற அணுகுமுறைகள் தவறாக உள்ளது சபைக்கும் ஒரு மரியாதை இருக்கும். இதனையே தொழிலாக செய்பவர்களுக்கு இவ்விடயம் பாதுகாப்பாக அமையும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, இவ்விடயம் தொடர்பில் கூட்டுறவு சங்க தலைவரிடம் நான் தொலைபேசி ஊடாக கதைத்தேன். மஸ்கெலியாவில் எமது சபைக்கு சொந்தமான முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் உள்ள முச்சக்கர வண்டிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு நான் கேட்டுக் கொண்டேன். எரிபொருள் கிடைத்தவுடன் மஸ்கெலியா பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளுக்கு முன்னுரிமை வழங்குவதாக அவர் உறுதியளித்தார். எரிபொருள் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவற்றை அப்புறப்படுத்தி விட்டு மீண்டும் வர வேண்டாம் எனவும் கூறினார். முற்றுமுழுதாக அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக கூறினார்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2022 ஏப்ரல் மாத சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக கடந்த சபைகளில் நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது, என்னுடைய உரையிலே இவ்விடயம் தொடர்பாக நான் மிகவும் தெளிவாக குறிப்பிட்டிருந்தேன். உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயத்தில் இருந்து வந்துள்ள கடிதத்தினையும் சபையறிக்கையினையும் எடுத்துப்பார்த்தால் நன்கு விளங்கும். நாம் செய்தது முற்று முழுதாக பிழை என்று நமக்கு தெரியும். சபையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சபை இணைவாக செயற்படுத்தியிருந்தால் இன்னொருவர் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் வந்திருக்காது. விசேட சபையொன்றை கூட்டி இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டிருந்தால் இவ்வளவு வாதவிவாதங்கள் ஏற்பட்டிருக்காது என்று நான் அன்றே கூறியிருந்தேன். இனிவருங்காலங்களிலாவது சபை எடுக்கும் தீர்மானங்களுக்கு இணைவாக செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

உள்ளூராட்சி துணை ஆணையாளரின் கடித்தின் பிரதியினை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கினால் பொருத்தமானதாக இருக்குமென நான் நினைக்கின்றேன்.

**கடித இல 02**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2022 மே மாத சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கடித இல 03**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - சபைக்கு சொந்தமான இடங்களுக்கான உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - தேசிய கணக்காய்வு காரியாலயம்.

**விடயம்** - மஸ்கெலியா பிரதேச சபையின் 2021 டிசம்பர் 31ம் திகதிக்கான கணக்காய்வு தொடர்பான கடிதம்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - வளதலை தோட்ட பொதுமக்கள்.

**விடயம்** - தனியார் போக்குவரத்து பஸ்சேவை தொடர்பான கடிதம்.

**கடித இல 06**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - பாதீட்டறிக்கை தொடர்பான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளல் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 02**

மேற்குறித்த கடிதத்திற்கமைய கிராம அபிவிருத்தி சங்கங்கள், மகளீர் அமைப்புக்கள், ஏனைய பொது மக்களை கொண்ட குழுக்களின் கருத்தைப் பெற்றுக்கொள்ள சபை ஏகமனதாக அனுமதி வழங்கியது.

**கடித இல 07**

**அனுப்புனர்** - விடயப்பொறுப்பாளர் - மஸ்கெலியா பிரதேச சபை.

**விடயம்** - RA – 9713 இலக்க டிரக்டர் வாகனம், 252 – 6523 கெப் வாகன திருத்தம் தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 03**

தொழிநுட்ப குழுவுடன் இணைந்து வாகன திருத்தத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையிலே தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையில் இருந்து பயிலுனர்களாக உள்ளவர்களுக்கு கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், இரண்டு பயிற்சியாளர்களுக்கு சபையின் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு 2000.00ரூபா மாதாந்த கொடுப்பனவாக தீர்மானித்துள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையின் நிதி நிலைமையை பற்றி கூறியதன் காரணமாக ஒரு விடயத்தை கேட்கின்றேன், மஸ்கெலியா நகரில் எத்தனை கண்காணிப்பு கமராக்கள் பொருத்தியுள்ளோம்? அதில் எத்தனை செயற்படுகின்றது?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

04 உள்ளது, மழை காரணமாக அவற்றில் சில பழுதடைந்துள்ளன.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சில விடயங்களை கண்காணிக்க தான் கண்காணிப்பு கமராக்களை பொருத்தியுள்ளோம், அதிலே சில பழுதடைந்துள்ளன என்று கூறும் போது ஏதாவது ஒரு சம்பவம் நடைபெற்று அரசாங்கத்தின் சார்பாக சபைக்கு கேட்கும் போது கமரா பழுதடைந்துள்ளது என்று கூறமுடியுமா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அண்மையில் அதனை கழற்றி பார்க்கும் போது பழுதடைந்திருந்தது, அதன் காரணமாக மீண்டும் அதனை சரிசெய்து பொருத்தியுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஒவ்வொரு மாதமும் அதனை பரிசோதிப்பது இல்லையா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

பார்ப்போம், கழிவுகள் தொடர்பான நிறைய விடயங்களை ஒவ்வொருமுறையும் பார்ப்பது வழக்கம். சபையிலும் நிறைய தடவைகள் கூறியுள்ளோம், கழிவுகள் வீதியில் எறியப்படுவதனால் அவற்றை கண்காணிக்க கமராக்களை பொருத்தியுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பெற்றோல் நிலையம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை பரிசோதிக்க கமராவை பார்த்த போது கமரா தொழிற்படவில்லை என்றால் மீண்டும் அதனை சரிசெய்து பொருத்தி விட்டீர்களா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், போடப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பெற்றோல் நிலையம் தொடர்பாக நிறைய முறைப்பாடு வருவதன் காரணமாக கண்காணிப்பு கமராவினை உரிய முறையில் பராமரிக்க அதிக கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தற்போது கண்காணப்பு கமரா பொருத்தப்பட்டுள்ள பக்கம் பொருத்தமாக இல்லை, அதனை சரியான பக்கம் பொருத்தவும்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென என நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கை இன்னும் முழுமையாக பார்த்து முடிக்கப்படவில்லை அதற்கிடையில் அதனை முன்மொழிந்து வழிமொழிந்து விட்டீர்கள். செலவறிக்கையிலே பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள இடத்திற்கு 1350.00ரூபா நீர்பாவனை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது, நீர் குழாயிற்கு 1430.00ரூபா கட்டப்பட்டுள்ளது, 02ம் ஒரே மாத பற்றுசீட்டு தான்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே பற்றுச்சீட்டில் மார்க்கட் இடத்திற்கு பஸ்நிலைய முகவரி தான் உள்ளது அதனை மாற்ற வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சிறிய குறிப்பாவது செலவறிக்கையில் இது தொடர்பாக இருந்திருந்தால் தெளிவாக இருக்கும். கடந்த சபையில் 02ம் வீதி மலசலக்கூட நீர்பாவனை கட்டணம் தொடர்பாக கூறப்பட்டது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இம்முறையும் 1000.00ரூபா கணக்கு செலுத்தப்பட்டுள்ளது

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தினமும் அம்மலசலக்கூடத்தை சுத்தம் செய்து நீர் தாங்கிக்கு நீர் நிறைக்கின்றனர்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

சாதாரணமாக நகரத்தில் உள்ள வீடுகளில் மீட்டர் தாங்கியிலுள்ள நீரை தான் பயன்படுத்துகிறார்கள். இதற்காக மாதாந்தம் 500.00 ரூபாய்க்கு குறைவான தண்ணீர் பில் தான் வருகின்றது. இங்கே 1197.00 ரூபாய் என்பது பெரிய தொகை. இந்த அளவு பாவனை செய்வதில்லை. மலசல கூடங்களுக்காக பாவித்தார்கள் என்றாலும் இது குளியல் பீலி அல்லவே. அங்கு அவ்வளவு பாவணை உள்ளதா?

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

அங்குள்ள கடைக்காரர்கள் அந்த மலசலக்கூடத்தை தான் பாவிக்கின்றனர்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தலைவர் அவர்களே 2022.07.07 நடைபெற்ற நிதிக்குழு அறிக்கைக்கு அமைவாக விடய இலக்கம் 03இன் படி தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையிலிருந்து மஸ்கெலியா பிரதேச சபையின் பயிலுனர்களாக இணைக்கப்பட்டுள்ள பயிலுனர்களுக்கான பிரயாண செலவை வழங்குதல் தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டு மாதாந்தம் 2000.00ரூபா வீதம் வழங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது

ஏற்கனவே இவ்வாறான கடிதங்கள் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இவ்வாறான கடிதங்கள் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பயிலுனர்களுக்கு எவ்வளவு வழங்கப்பட்டது? தற்போது எதனை அடிப்படையாக கொண்டு 2000.00ரூபா தீர்மானிக்கப்பட்டதென்பதனையும், அவர்கள் எங்கிருந்து வருகின்றனர் என்று தெளிவுப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஒருவர் குடா மஸ்கெலியாவில் இருந்தும் இன்னொருவர் மஸ்கெலியாவில் இருந்து வந்துள்ளனர். வழமையாக வரும் பயிலுனர்களுக்கு 20 நாட்களுக்கு 500.00வீதம் வழங்குவோம், எனினும் தற்போது சபையின் நிதிநிலைமையை கருத்திற்கொண்டு 2000.00ரூபா வழங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது, இவர்கள் அருகிலிருந்து வருவதனால் இத்தொகையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இனிவருங்காலங்களில் சாமிமலையில் இருந்தோ அல்லது வேறு ஏதாவது தூர பிரதேசங்களில் இருந்து வந்தால் நிதிநிலைமையை கருத்திற்கொண்டு 2000.00ரூபா என்ற ஒரு விடயத்திற்கு வரக்கூடாது, ஏனென்றால் தூர பிரதேசங்களில் இருந்து வந்தவர்களும் உள்ளனர். வரப்போகவும் உள்ளனர். இந்நாட்டின் நிலைமைப்படி 2000.00ரூபா என்பது தற்போது பொருத்தமானதாக இருக்காது. கடந்த காலங்களில் 10,000.00ரூபா வரை வழங்கியிருந்தோம். ஏற்கனவே சபையில் பேசியுள்ளோம். அநாவசிய செலவுகள் அதிகரித்துள்ளது. ஆனால் இவர்களை பயன்படுத்தி காரியாலயத்தில் மேலதிக வேலைகளை செய்ய வாய்ப்பாக இருக்கும் ஆகவே இந்த 2000.00ரூபா என்பதனை, ஏனைய அநாவசிய செலவுகளை தவிர்த்து ஒரு 3500.00ரூபா ஆக அல்லது 5000ரூபாவாக வழங்குவது தான் பொருத்தமானதாக இருக்கும். கௌரவ தலைவர் அவர்களே 05,06 விடயங்கள் தொடர்பாக நிதிக்குழு சிபாரிசுகளை மேற்கொண்டுள்ளது. இதில் 03வது சிபாரிசுக்கு தான் தற்போது எனது ஆலோசனையை முன்வைத்திருந்தேன். நிதிக்குழு முன்வைத்துள்ள சிபாரிசுகளுக்கு தீர்மானத்தை நிறைவேற்றி தான் பின்னர் நிதிக்குழு அறிக்கையை முன்மொழிய வேண்டும்.

உறுப்பினர் அவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிதிக் குழு அறிக்கையிலே, நிதி குழுவில் கலந்துரையாடப்பட்ட ஆறு விடயங்கள் சபைக்கு முன்மொழியப்பட்டுள்ளது. அந்த யோசனைகள் தொடர்பில் எமது யோசனைகளை அல்லது இது சரியா? பிழையா? என்று கேட்டறிந்து கொண்டதன் பின்னர் தான் இந்த அறிக்கை தொடர்பில் முன்மொழிவுகள் வழிமொழிவுகள் முன்வைக்கப்படல் வேண்டும். நீங்கள் திடீரென எழுந்து கூறி விட்டீர்கள். அது பிழை அல்ல. எனினும் தொழிற் பயிற்சி அதிகார சபையினால் பயிற்சிக்காக இருவரை இந்த சபைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இருப்பினும் அவர்கள் இருவருக்கும் தலா 2000.00 ரூபாய் வீதம் போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்படுவதில் பயன் என்ன? இதற்கு முன்னர் நாங்கள் சபையூடாக 10000.00 ரூபாய் வழங்கியுள்ளோம். நான் 2000.00 ரூபாய் வழங்குவது தொடர்பில் தான் பேசுகின்றேன்.

தாங்களும் இது தொடர்பில் கதையுங்கள். சகோதர மொழி பேசுகின்ற சகோதரிகள் இருவர். அதற்காக நான் கூறவில்லை. இது பொதுவாக நடைபெற வேண்டும். முதலில் பத்தாயிரம் ரூபாய் வழங்கிவிட்டு திடீரென 2000 ரூபாய் வழங்கப்படும் போது இத்தினங்களிலே 2000 ரூபாயை கொண்டு அவர்களுக்கு என்ன செய்ய முடியும்? எனவே விடயம் தொடர்பில் இந்த சபை கூடிய கவனம் செலுத்த வேண்டும். கௌரவ உறுப்பினர் திசாநாயக்க அவர்களும் இவ்விடயம் தொடர்பில் பேசுங்கள். தாங்கள் நிதிக் குழுவிலும் இருக்கின்றபடியால், 2000.00 ரூபாய்க்கு பதிலாக 3000.00 ரூபாய் மேலதிகமாக சேர்த்து 5000.00 ரூபாய் வழங்கினால் பொருத்தமாக இருக்கும் என்று தாங்களும் கதையுங்கள்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

கௌரவ தவிசாளர் அவர்களே, தாங்கள் இதனை நிதிக் குழுவிற்கு சமர்ப்பித்திருந்தீர்கள். சபையில் நிதிப் பற்றாக்குறை காணப்படுவதனால் எம்மால் ஒரு தொகையை வழங்க முடியாதாயினும், 1000.00 ம் ரூபாய் பெற்றுக் கொடுப்போமா என்று செயலாளர் கூறினார். அதன் பின்னர் தான் நாங்கள் 2000.00 ம் ரூபாய் வழங்கலாம் என முன்மொழிந்தோம். கௌரவ உறுப்பினர் கூறியது போல இதற்கு முன்னர் நாம் அவர்களுக்கு 10000.00 ம் ரூபாய் போக்குவரத்துக்காக வழங்கியிருந்தால், சபையில் நிதி இருப்பில் காணப்படுமாயின் அதனை வழங்குவதில் பிரச்சனை இல்லை. நிதிப் பற்றாக்குறை காணப்பட்டதால் தான் நாம் இந்த அளவை தீர்மானித்தோம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆரம்பத்தில் சாமிமலை, லக்கம் பிரதேசத்தில் இருந்து வந்ததன் காரணமாக நாம் பேசி அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கினோம், தற்போது சபையின் நிதி நிலமையை கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் வேண்டுமானால் அதிகரித்து வழங்குவோம், இனிவருபவர்களுக்கும் வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

செயலாளர் அவர்களின் விளக்கத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியும். தற்போது காணப்படும் நிலைமையின் அடிப்படையில் அவர்கள் அலுவலகத்தில் காணப்படுகின்ற வசதிகளை பாவனைக்கு எடுப்பது அல்ல பிரச்சனை. அவர்கள் உரிய நேரத்தில் அலுவலகத்திற்கு வருகை தர வேண்டும். அலுவலகத்திற்கு வருகை தர வேண்டிய முறைப்படி வருகை தர வேண்டும். இதற்கு முன்னதாக நாம் 10000.00 ம் ரூபாய் வழங்கியுள்ளோம். அதனை தற்போது 2000.00 ம் ரூபாவாக குறைத்துள்ளோம். உண்மையில் அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். இதற்கு முன்னரும் சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இவ்வாறான

உத்தியோகத்தர்கள் சபையில் சிறப்பாக சேவை ஆற்றினர். எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் பலனை பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே இந்தத் தொகையை அதிகரித்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அவ்வாறானால் 1500.00ரூபா சேர்த்து வழங்குவோம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தற்போதுள்ள நிலைமைப்படி தொகையை அதிகரிப்பது சிக்கலான விடயம், தினமும் வருமானம் சேகரிக்க உத்தியோகத்தர்களை அனுப்புகின்றோம், அவர்களுக்கும் ஒரு பிரயாண செலவை வழங்குகின்றோம், எனவே இனிவருங்காலங்களில் வெளியிலிருந்து வருபவர்களுக்கு பேரூந்து கட்டணம் தேவைப்படுவதனால் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பயிலுனர்களாக வருபவர்கள் உண்மையில் அர்பணிப்புடன் செயற்படுவர், நாம் கொடுப்பனவு வழங்குவது ஒரு உத்வேகத்தை அளிக்கும்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

பயிலுனர்கள் தொடர்பாக ஒரு தீர்மானத்தை எடுக்கவும், குறித்த காலப்பகுதியில் ஒருவரை தான் இணைத்துக்கொள்ள போகின்றோம் என்று தீர்மானித்து, அவருக்கான கொடுப்பனவினை வழங்கவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

02பேரை ஒரு தடவையில் இணைத்துக்கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களே, சந்தேகமொன்று ஏற்பட்டுள்ளது நிதி அறிக்கை அனைவருக்கும் நேரத்துடன் வழங்கப்பட்டு விட்டது, ஏனென்றால் இவ்வளவு நேரம் சபையில் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக கூற வேண்டும். நிதி அறிக்கை முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டதன் பின்னர் மீண்டும் நிதிக்குழு அறிக்கை தொடர்பாக வாத விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஏனென்றால் ஒரே விடயம் தொடர்பாக 02 தடவை எழுப்பப்பட்ட கேள்விக்கு கௌரவ தவிசாளர் அவர்கள் பதில் கூறிக்கொண்டுள்ளீர்கள். கௌரவ உறுப்பினர் சுரேஸ்குமார் அவர்கள் தற்போது கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். அதற்கு முன்னர் அதே கேள்வியை கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்கள் எழுப்பியிருந்தார். ஒரே விடயத்தை தொடர்ந்து வாத விவாதத்திற்கு உட்படுத்திக்கொண்டிருக்கின்றனர். ஒரே விடயம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு தவிசாளர் அவர்கள் தவிசாளர் அவர்கள் பதில் கூறுவது கேள்விக்குறியான விடயம். இவ்விடயம் போல தற்சமயத்தில் கௌரவ உறுப்பினர்கள் வந்து போவது கூட கடினமாக உள்ளது, எனவே இந்த நேரத்தில் இவர்களுக்கு எவ்வாறு நிதியினை கருத்திற்கொண்டு ஒரு தொகையை வழங்க தீர்மானித்துள்ளீர்களோ அதே போல கௌரவ உறுப்பினர்கள் வந்து போவது கடினமாக உள்ளது, எனவே இந்த நேரத்தில் அவர்களுக்கு எவ்வாறு நிதியினை கருத்திற்கொண்டு ஒரு தொகையை வழங்க தீர்மானித்துள்ளீர்களோ அதேபோல கௌரவ உறுப்பினர்கள் வந்துபோவதும் கடினமாக உள்ளது, எனவே கௌரவ உறுப்பினர்களுக்கும் நிதியினை அதிகரிக்க வேண்டும். ஏனென்றால் மஸ்கெலியா நகரத்தில் இருந்து வருபவர்களுக்கு 5000.00, 6000.00, 7000.00 ரூபாவிற்கு அனுமதி கொடுக்கும் போது கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்கள் லக்சபான பிரதேசத்தில் இருந்து வருகின்றார், ஏனைய கௌரவ உறுப்பினர்கள் பஸ்ஸில் தான் வருகின்றனர், எனவே இவர்களுக்கும் வழங்குவதற்கான முன்மொழிவை முன்வைக்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதி அறிக்கையை கலந்து பேசவில்லை என்பதற்காக எழும்பி பேசினார்கள். வழமையாக அறிக்கை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இது தொடர்பாக பேசப்படுவதனை நாம் அவதானிக்கலாம். அவர் கேட்ட கேள்வியையே இவரும் கேட்டார், தவிசாளர் என்ற ரீதியிலே நான் பதிலளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே கௌரவ உறுப்பினர் எழுப்பிய கேள்வி சரி, எனினும் மஸ்கெலியா பிரதேச சபையின் கௌரவ உறுப்பினர் என்ற ரீதியிலே மஸ்கெலியா பிரதேச சபையின் செலவறிக்கை தொடர்பாக கேள்வி எழுப்ப எனக்கு சகல அதிகாரமும் உள்ளது, செலவறிக்கையை எல்லோரும் பாரத்துக்கொண்டிருக்கும் போது கௌரவ உறுப்பினர் பெரேரா அவர்கள் முன்மொழித்து விட்டார். இன்னும் அறிக்கையினை பார்வையிட்டு முடிக்கவில்லை அதனை புரிந்துக்கொள்ள வேண்டும். நிதி அறிக்கையுடன் செலவறிக்கையை நாம் ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நான் கூறவருவது இது தான், இதற்கு முன்னர் நடைபெற்ற சகல விடயங்களில் செலவுகள் அதிகம் குறைக்கப்பட வேண்டும் என்று தாங்களே கூறியுள்ளீர்கள், தற்போது சபையின் நிதி நிலைமையை கருத்திற்கொண்டு தாங்களும் கூறும் விடயம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது தான். இது எந்தளவு பொருத்தமானதாக இருக்குமென்பது கேள்விக்குறி.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சரி, கௌரவ உறுப்பினர் அவர்களே எதிர்வரும் நிதிக்குழுவில் சபைக்கு வரும் வருமானத்திற்கு அமைய கலந்துரையாடி ஒரு தொகையை தீர்மானிப்போம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் என்ன கூறுகின்றார் என்றால் கொடுப்பனவு மஸ்கெலியாவில் இருந்து வருபவர்களுக்கும், ஏனைய பிரதேசங்களில் இருந்து வருபவர்களுக்கும் ஒன்று தான் கொடுக்கின்றோம் என்று, அதேபோல அனைத்து உறுப்பினர்களுக்கும் கொடுப்பனவு ஒன்று தான் அதனை சுட்டிக்காட்ட முடியாது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களே, என்னால் புரியப்பட்ட அந்தப் பிழைக்கு மன்னிப்பு கோருவதோடு நான் ஒரு சில விடயங்களை கூற வேண்டும். இந்த 2000.00 ம் ரூபாய் பிரச்சினை தொடர்பில் கௌரவ உறுப்பினர் அவர்கள் வருவதற்கு முன்னதாக கதைத்திருந்தார். அந்த நேரத்தில் யாவரும் அமைதியாக இருந்தார்கள். அப்போது அந்தப் பிரச்சினை அவ்விடத்தில் முடிந்து விட்டது. அதன் பின்னர் மீண்டும் கதைத்ததனால் தான் மீண்டும் பிரச்சனை முன் கொண்டுவரப்பட்டது. அதனை நான் குறிப்பிட்டாக வேண்டும். எம்மைப் போன்ற ஒருவர் கதைக்கும் போது எல்லா சந்தர்ப்பங்களிலும் இவர்கள் எமக்கு எதிராக கதைக்கின்றார்கள். நாங்கள் எதனைப் பேசினாலும் இவர்கள் எழும்பி நின்று எமக்கு எதிராக எதையாவது கூறுகின்றார்கள். அதனால் தான் நாங்கள் அமைதியாக இருக்கின்றோம். இச்சபையிலே கதைப்பதற்காக எங்களுக்கும் உரிமை உண்டு. ஒரு சொல்லையாவது பேசும் எந்த சந்தர்ப்பத்திலும் இவர்கள் எமக்குப் பிரச்சினை ஏற்படுத்துகின்றார்கள். அது நல்லதல்ல. ஏதாவது அறிவைப் பெற்றுக் கொண்டுதான் இவர்களைப் போன்று நாமும் அரசியலுக்கு வந்துள்ளோம். எனவே மீண்டும் ஒருமுறை இந்த நிதிக் குழு அறிக்கை உண்மையானது என நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

02வது தடவையாக நிதிக்குழு அறிக்கையினை நான் வழிமொழிகின்றேன்.

**2022.07.07ம் திகதி நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் பின்வருமாறு சபையில் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டது.**

**விடய இல 01**
ரிக்காடன் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் வீசும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்தும் மருந்து வகை ஒன்றினை கொள்வனவு செய்வது தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 04**
மேற்குறிப்பிட்ட மருந்து வகையில் முதலில் சிறு அளவிலான மருந்தினை கொள்வனவு செய்து அதன் உபயோகம் செய்து பெறப்படும் வினைத்திறனுக்கு அமைய பின்னர குறித்த மருந்தை கொள்வனவு செய்ய நிதிக்குழு சிபாரிசு செய்த விடயத்திற்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 02**
தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையினூடாக மஸ்கெலியா பிரதேச சபையிற்கு பயிலுனர்களாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள J.V.காவிந்தி, G.W.G.இமேசா லக்மாலி ஆகிய இருவருக்குமான பிரயாண செலவினை பெற்றுக்கொடுப்பது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 05**
மேற்படி விடயம் தொடர்பாக சபையின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு தொகையினை நிர்ணயிக்க தீர்மானிக்கப்பட்டது.

**விடய இல 03**
காரியாலயத்திற்கு தேவையான Printing Items இனை கொள்வனவு செய்வதற்கான விலைமனுகோரல்கள் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

| No | Item | A2B creation | Vijaya graphic | New JS Printers |
|---|---|---|---|---|
| 1 | P.S. 01 | 800.00 | 700.00 | 650.00 |
| 2 | P.S. 02 | 850.00 | 800.00 | 700.00 |
| 3 | P.S. 03 | 950.00 | 950.00 | 850.00 |
| 4 | Field receipt book (Sub recipt book) | 700.00 | 650.00 | 550.00 |
| 5 | Re shedule book | 1,550.00 | 1,500.00 | 1,400.00 |
| 6 | Cheque book register | 2,400.00 | 2,300.00 | 2,200.00 |
| 7 | Cash Summery Book | 2,600.00 | 2,550.00 | 2,400.00 |
| 8 | Vote Ledger | 2,600.00 | 2,550.00 | 2,400.00 |
| 9 | General Ledger | 2,700.00 | 2,600.00 | 2,500.00 |
| 10 | Advance Ledger | 3,800.00 | 3,600.00 | 3,500.00 |
| 11 | Payment cash book | 4,700.00 | 4,600.00 | 4,500.00 |
| 12 | Deposit ledger | 3,700.00 | 3,600.00 | 3,500.00 |
| 13 | Salary ledger | 4,300.00 | 4,200.00 | 4,000.00 |
| 14 | Loan ledger | 4,700.00 | 4,600.00 | 4,500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | Audit report ledger | 3,700.00 | 3,600.00 | 3,500.00 |
| 16 | Personal file register | 3,700.00 | 3,600.00 | 3,500.00 |
| 17 | Inventory book | 3,850.00 | 3,800.00 | 3,700.00 |
| 18 | Fuel register | 3,900.00 | 3,850.00 | 3,700.00 |
| 19 | Travelling expense register | 3,900.00 | 3,850.00 | 2,400.00 |
| 20 | Over time register | 2,550.00 | 2,500.00 | 2,400.00 |
| 21 | stamp register | 2,550.00 | 2,500.00 | 2,400.00 |
| 22 | Attendance register | 2,550.00 | 2,500.00 | 2,400.00 |
| 23 | Leave ledger | 3,900.00 | 3,800.00 | 3,700.00 |
| 24 | Indent book | 1,700.00 | 1,600.00 | 1,500.00 |
| 25 | Stock register | 2,600.00 | 2,500.00 | 2,400.00 |
| 26 | Stores Issue Book | 1,700.00 | 1,600.00 | 1,500.00 |
| 27 | Stores return issue book | 1,700.00 | 1,600.00 | 1,500.00 |
| 28 | Good received note book | 1,700.00 | 1,600.00 | 1,500.00 |
| 29 | Construction Agrement - Legal 8 pg | 150.00 | 120.00 | 100.00 |
| 30 | Government fund relife ledger | 3,900.00 | 3,800.00 | 3,700.00 |
| 31 | Sundry creditors register | 4,700.00 | 4,600.00 | 4,500.00 |
| 32 | Sundry debitors register | 4,700.00 | 4,600.00 | 4,500.00 |
| 33 | Building application register | 3,700.00 | 3,600.00 | 3,500.00 |
| 34 | C of C certificate book | 1,000.00 | 950.00 | 850.00 |
| 35 | Council minutes pasting book | 4,550.00 | 4,450.00 | 4,300.00 |
| 36 | council Signature book | 2,700.00 | 2,600.00 | 2,500.00 |
| 37 | Council meeting attendance register | 2,700.00 | 2,600.00 | 2,500.00 |
| 38 | Street line certificate 50 set | 1,500.00 | 1,300.00 | 1,200.00 |
| 39 | Misc.Deposit ledger | 3,900.00 | 3,850.00 | 3,700.00 |
| 40 | Misc. Revenue ledger | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3,900.00 | 3,850.00 | 3,700.00 |
| 41 | Lease rent ledger | 4,500.00 | 4,300.00 | 420.00 |
| 42 | Trade license ledger | 4,700.00 | 4,600.00 | 3,600.00 |
| 43 | Assesment ledger | 4,700.00 | 4,600.00 | 3,400.00 |
| 44 | Water ledger | 4,700.00 | 4,600.00 | 4,000.00 |
| 45 | Environment lisens register | 4,550.00 | 4,450.00 | 4,300.00 |
| 46 | Pocket cheak roll | 1,650.00 | 1,500.00 | 1,200.00 |
| 47 | Board file | 700.00 | 500.00 | 300.00 |
| 48 | Fuel request | 1,000.00 | 900.00 | 750.00 |
| | | | | |
| 49 | Building application form | 200.00 | 180.00 | 160.00 |
| 50 | Red notice | 1,600.00 | 1,500.00 | 1,200.00 |
| 51 | Red notice (Water biil) | 1,600.00 | 1,500.00 | 1,200.00 |
| 52 | Red notice (Market shop) | 1,600.00 | 1,500.00 | 1,200.00 |
| 53 | Sub division application | 25.00 | 20.00 | 15.00 |
| 54 | Payment voucher form | 15.00 | 12.00 | 9.00 |
| 55 | Trade license application form A4 | 20.00 | 15.00 | 10.00 |
| 56 | Letter head A4 | 15.00 | 12.00 | 9.00 |
| 57 | Letter head A5 | 15.00 | 10.00 | 5.00 |
| 58 | Store issue order form | 25.00 | 20.00 | 10.00 |
| 59 | Environment lisens form set | 200.00 | 180.00 | 120.00 |
| 60 | Environment lisen inspection form set | 200.00 | 180.00 | 120.00 |

**தீர்மான இல 06**
கிடைக்கப்பெற்ற விலைமனுகோரல்களில் விலையினையும் தரத்தினையும் கருத்திற்கொண்டு J S Printers நிறுவனத்தில் கொள்வனவு தீர்மானிக்கப்பட்டது.

**விடய இல 04**
RD – 1231 டிரக்கடர் வாகன திருத்தம் தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 07**
மேற்படி கடித்திற்கு அமைவாக டிரக்கடர் வாகனத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக வாகன திருத்துனர் ஒருவரிடம் அறிக்கை ஒன்றை பெற்று தொழிநுட்பகுழுவிற்கு சமர்ப்பித்து அதன் பின்னர் வாகனத்தை திருத்தம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

**விடய இல 05**
சயைமர்வு நடவடிக்கைகளுக்கான Sound System இனை பெற்றுக்கொள்வது தொடர்பான விடயம் நிதிக்குழுவில் கலந்துரையாடப்பட்டது.

**தீர்மான இல 08**
மேற்படி விடயத்திற்கு விலைமனு கோர சபையினால் அனுமதி வழங்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் கே. நித்தியானந்தன் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

2021,2022ம் ஆண்டுக்கான காலப்பகுதியில் இலங்கையில் உள்ள அனைத்து உள்ளுராட்சி சபைகளினதும் உறுப்பினர்களினூடாக வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களினூடாக உறுப்பினருக்கு 04 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டது, அவ்வேலைத்திட்டம் எனக்கும் கிடைக்கப்பெற்றது. அதிலே நான் 02 மில்லியன் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களை கோரியிருந்தேன். அதிலே 1.2மில்லியன் ரூபாய் பெறுமதியான தையல் இயந்திரங்கள் கடந்த வாரம் எனது வட்டாரத்திற்கு கிடைக்கப்பெற்றது, நான் எனது வட்டாரத்திலுள்ள 05 தோட்டப்புறங்களை தெரிந்தெடுத்து அதிலே ஒரு தோட்டத்திற்கு இருவரை தெரிந்தெடுத்து வறுமையின் கீழ் வாழும் இளைஞர்களுக்கு வழங்கியுள்ளேன். மக்களால் தற்போது அவர் வேண்டாமென கூறப்பட்டாலும் இச்சந்தர்ப்பத்தில் மக்களுக்கு இந்த தையல் இயந்திரத்தை பெற்றுக்கொடுத்தமைக்காக முன்னாள் நிதியமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அம்பகமுவ பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக உள்ள ராமேஸ்வரன் அவர்களுக்கும், பிரதேச செயலாளர் அவர்களுக்கும் , சபையின் தலைவர் மற்றும் செயலாளர் அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்ததாக எனது முதலாவது பிரேரணையாக 450.00ரூபா சமுர்த்தி கூப்பன் பெறும் பயனாளிகள் சம்பந்தமாக பிரேரணையினை முன்வைக்கவுள்ளேன், 2020ம் ஆண்டு சமுர்த்தி கொடுப்பனவு 03 விதமாக அதிகரிக்கப்பட்டது, 1000.00, 2000.00, 3000.00 ஆக காணப்பட்டது. அது கடந்த வருடம் 05ம மாதம் 1000.00ரூபா 2000.00வாகவும், 2000.00ரூபா 3800.00வாகவும், 3000.00ரூபா 4500.00ரூபாவாகவும் வழங்கப்பட்டது. தற்போது 2000.00ரூபா பெறுபவர்களுக்கு 5000.00வாகவும் 3000.00ரூபா பெறுபவர்களுக்கு 6300.00ரூபாவாகவும், 4500.00ரூபா பெறுபவர்களுக்கு 7500.00ரூபாவாகவும் தற்போது வழங்கப்படுகின்றது. அது வரவேற்கதக்க விடயம், எனினும் கடந்த வாரம் 2000.00ரூபா பெறும் முதியோர்களின் கொடுப்பனவு 6000.00ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது, இருப்பினும் இந்த 450.00ரூபா கூப்பன் பெறுபவர்கள் உள்ளனர், இவர்களுக்கு எவ்வித கொடுப்பனவும் அதிகரிக்கப்படுவது இல்லை, எனது வட்டாரத்திலுள்ள எமில்டனில் இருந்து நோர்வூட் சென்று இந்த 450.00ரூபா கூப்பன் பணத்தை பெற ஒருவர் சுமார் 700.00ரூபா செலவழிக்கவேண்டியுள்ளது. அத்துடன் அவர்களது ஏனைய தேவைகளும் இருக்கும். எனவே இது தொடர்பாக நான் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு நேரடியாக பிரதேச செயலகத்திற்கு சென்று கதைத்திருந்தேன், இதற்கு அவர்கள் கூறியதாவது இவ்விடயம் தொடர்பாக உங்கள் சபையின் பிரேரணை ஒன்றை நிறைவேற்றி தீர்மானமொன்றை மேற்கொண்டு அறிக்கை ஒன்றை தயாரித்தால் அதனை உரிய இடத்திற்கு அனுப்பிஇதனை அதிகரிக்கலாம் என கூறினர். இந்த சபையின் ஒவ்வொரு வட்டாரத்திலும் கிட்டத்தட்ட 10,20 பயனாளிகள் உளளனர், அப்படிபார்த்தால் முழு சபைக்குட்பட்டு 200, 300 பேர் உள்ளனர். இந்த 450.00 கூப்பனை தற்போது பெற்று அவர்களுக்கு எந்த பயனும் இல்லை. 2000.00 அல்லது 3000.00 வழங்கினால் தான் அது பயனள்ளதாக இருக்கும் என்பது எனது கருத்து. எனவே இதனை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டியது எமது கடமை, ஆகவே சபையினூடாக சமுரத்தி வங்கிகளுக்கும், பிரதேச செயலாளருக்கும் கடிதமொன்றை அனுப்பி வைக்குமாறு தவிசாளர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் கொண்டுவந்த இந்த சமுர்த்தி கூப்பன் தொடர்பாக தொடர்ச்சியாக கௌரவ உறுப்பினர்களாகிய நித்தியானந்தன் அவர்கள், பி.ராஜ்குமார் அவர்கள், கே.சுரேஸ்குமார் அவர்களும் அதிகமாக இச்சபையிலே பேசியுள்ளனர். 450.00 மாத்திரமல்லாமல் பாதிக்கப்பட்டவர்கள் நிறைய பேர்

உள்ளனர். ஏனைய வட்டாரங்களில் இந்த கூப்பன் பிரச்சினை எந்தளவு உள்ளதென தெரியாது, ஆனால் மறே, சீத்தகங்குல வட்டாரங்களில் அதிகமாக இப்பிரச்சினை உள்ளது. பொருத்தமற்றவர்களுக்கு கூப்பன் கிடைப்பது அதிகமாக உள்ளது. பொருத்தமானவர்கள் புறந்தள்ளப்பட்டுள்ளனர். அந்த பட்டியலை நான் அந்த உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்தேன்., அதனை வழங்கியும் உரியவர்களுக்கான எந்த உதவியும் கிடைக்கப்பெறவில்லை, அதற்கான காரணம் என்னவென்றால் வாக்குபட்டியல் அடிப்படையில் பார்க்கும் போது ஒரே பட்டியலில் எல்லாம் உள்ளனர் என்ற காரணத்தை முன்வைத்தார். நம் கிராமத்தில் கூட்டு குடும்பமாக வாழ்ந்தவர்கள் தான் அதிகமாக உள்ளனர். அவர்ளுக்கு வாக்கு பட்டியலை பிரித்து வைக்க வேண்டும் என்பது தெரியாது. ஒரே குடும்பத்தில் 03 சமையலறைகளை வைத்து வாழ்பவர்களும் உள்ளனர். வீடுகளுக்கு சென்று பார்வையிட்டு நிலவரத்தை பார்த்து வழங்க சொல்லுங்கள். உதாரணமாக வளதலை பிரதேசத்தில் புஸ்பலீலாவதி என்ற கணவனை இழந்த பெண்மணி ஒருவர் உள்ளார். மகனின் பிள்ளையை பார்க்க யாரும் இல்லை, இந்த பெண்மணியின் அரவணைப்பில் தான் அந்த பிள்ளை உள்ளான். அவர்களுக்கு உணவு உண்ணக் கூட வழியில்லை, உதவி செய்யவும் யாரும் இல்லை. ஆனால் அவர்களுக்கு கிடைக்கும் கூப்பன் 1500.00ரூபா இவ்வாறு நிறைய பேர் உள்ளனர். இவ்வாறான குடும்பங்களை தெரிவு செய்து வழங்கினால் நன்மையாக அமையும். இவ்வாறான குடும்பங்களுக்கு வழங்கப்படும் தொகையை அதிகரிக்க சபையினூடாக நடவடிக்கை எடுக்க வேண்டும், அதேபோல 450.00ரூபா கூப்பனையும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்தால் நன்மையாக அமையும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

முதியோர் கொடுப்பனவு 2000.00ரூபா கொடுக்கப்படுகின்றது என நான் நினைக்கின்றேன், இக்கொடுப்பனவை பெற்றுக்கொள்ள மிகவும் வயதானவர்களை இருவர் கை தாங்களாக பிடித்து கொண்டு வந்து தபால் நிலையத்திற்கு அழைத்து வருவதனை நாம் காணக்கூடியதாக உள்ளது, எனவே கௌரவ உறுப்பினர் சுரேஸ் குறிப்பிட்டது போல முதியோர் கொடுப்பனவை அவரவர்களின் வீடுகளுக்கு கொண்டு சென்று கொடுத்தால் மிகவும் நன்மையாக இருக்கும் எனவே அது தொடர்பான கடிதங்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 15 இலட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் கிடைக்கப்பெற்றது, மக்களுக்கு அவை கையளிக்கப்பட்டுள்ளது, இதற்காக தவிசாளர் அவர்களுக்கு நான் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அம்பகமுவ பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் திரு.இராமேஸ்வரன் அவர்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் இதனை பெற்றுக்கொடுத்தார், வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்நிதியுதவியினை செய்த முன்னாள் நிதி அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். சமுர்த்தி உதவி கிடைக்கப்பெற வேண்டிய பலருக்கு இக்கொடுப்பனவு கிடைக்காமல் உள்ளது, ஒரு வீட்டில் அனைவரும் இத்தொகையை பெறுகின்றனர். சமுர்த்தி உத்தியோகத்தர்களை அழைத்து மற்றும் சமுர்த்தி முகாமையாளருடன் கலந்துரையாடல் ஒன்றை செய்ய வேண்டும். நடக்க முடியாத வயோதிபர்கள் அத்தொகையை பெய தபாலகத்திற்கு வரவேண்டிய நிலை ஏற்படுகின்றது, நல்ல வசதி படைத்தவர்களுக்கு தான் சமுரத்தி கொடுப்பனவு வழங்கப்படுகின்றது, எனவே இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்கள் கூறிய சமுர்த்தி கொடுப்பனவு தொடர்பாக எல்லா வட்டாரத்திலும் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களிடமும் பெயர் பட்டியலை கேட்டோம் அவர்கள் தரவில்லை, பின்னர் நாங்கள் தகவலறியும் சட்டத்தின் மூலமாக அந்த பெயர் பட்டியல்களை பெற்றுக்கொண்டோம். சம்பந்தப்பட்டவர்களுக்கு நான் பெயர் பட்டியலை தருகின்றேன். வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு தான் யாருக்கு இக்கொடுப்பனவு வழங்க வேண்டும், இல்லை என்பது தெரியும். கட்டாயம் கொடுக்கப்பட வேண்டியவர்களின் பெயர்பட்டியலை நாம் அனுப்புவோம். இவ்விடயத்திற்கான சரியான தீர்வை பெற்றுத்தருவதாக பிரதேச செயலாளர் நேற்று என்னிடம் கூறினார். யார் யார் 450.00ரூபா கூப்பன் பெறுகின்றார்கள் என்ற பெயர்பட்டியலை தாங்களும் திரட்டுங்கள்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கூப்பன் அதிகரிக்கப்பட வேண்டும். சரியான பயனாளிகளுக்கு இது கொண்டு செல்லப்பட வேண்டும், அத்துடன் இந்த 450.00ரூபா கூப்பன் கட்டாயம் அதிகரிக்கப்பட வேண்டும், இதற்காக சபையினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையினூடாக இவ்விடயத்தை கொண்டு வந்தது சந்தோசம், 450.00ரூபா கூப்பன் ஒன்று உள்ளது என்று மேலிடத்திற்கு கொண்டு செல்ல வேண்டியது அந்தந்த வங்கி முகாமையாளர்களினதும், உத்தியோகத்தர்களினதும் கடமை. ஏனைய கூப்பன் தொகை அதிகரிக்கப்பட்ட போதிலும் இது மட்டும் அதிகரிக்கப்படாமை அவர்களின் தவறு தான், ஒரு கிராமசேவகர் பிரிவிலுள்ள கூப்பனை வெட்டும் போது அதனை அதே கிராமசேவகர் பிரிவிலுள்ள கஸ்டமான ஒருவருக்கு வழங்கினால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அதனை வெட்டி வேறு இடத்திற்கு வழங்குவது தான் சிக்கல். அரசாங்கத்தின் கீழ் எந்த நிவாரணம் வழங்கப்பட்டாலும் வறுமை கோட்டிற்கு கீழுள்ளவர்கள் என்று முதலில் சமுர்த்தி பயனாளிகளுக்கு தான் வழங்கப்படுகின்றது. ஆனால் அதற்கு கீழ் வறுமையில் உள்ளவர்கள் நிறையபேர் உள்ளனர். மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் தான் களத்தில் இறங்கி வறுமை கோட்டிற்கு கீழுள்ளவர்களின் பெயர்ப்பட்டியலை எடுக்காலாம். அந்த தரவுகளை பிரதேச, மாவட்ட செயலாளர்களுக்கும், சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் அனுப்பினால் அதனை அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும், அவ்வாறு அவர்கள் பரிசீலனை செய்யாத சந்தர்ப்பத்தில் மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் நடவடிக்கை எடுக்கலாம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு தான் யார் யாருக்கு 450.00ரூபா முத்திரை கிடைக்கின்றது என்று தெரியும், பெயர்பட்டியலை எடுத்தால் தான் ஏதாவது செய்ய முடியும்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

சமுர்த்தி விடயம் தொடர்பாக தவிசாளர் அவர்கள் கூறிய விடயங்கள் வரவேற்கத்தக்க விடயங்கள், அவ்விடயத்தில் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் சில விடயங்களை திரட்டிக்கொண்டது சிறந்த விடயம். அந்தந்த வட்டார உறுப்பினர்களினூடாக இந்த தகவலை திரட்டிக்கொள்வது சிறப்பாக அமையும். வட்டார உறுப்பினர்களோடு தான் மக்கள் அதிகளவு தொடர்பினை பேணுகின்றனர். என்னுடைய வட்டாரத்திலே சமுரத்தி பயனாளிகள் உள்ளனர். அதிலே செல்வந்தராக வழக்கூடியவர்கள் அந்த பயனை பெற்றுக்கொள்கின்றனர். வருமானம் குறைந்தவர்கள், வயதானவர்கள், கணவனை இழந்த பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று ஒரு விடயம் உள்ளது, ஆனால் அவ்வாறு நடைபெறுவது குறைவு அந்தந்த வட்டாரங்களில் குழு ஒன்றை அமைத்து அதற்கான தலைவர் ஒருவரையும் நியமித்துக்கொள்கின்றனர், சமுர்த்தியினூடாக வரும் பயனை மக்களுக்கு கொடுக்க அந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அந்த தலைவரினூடாக தான் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அந்த நபர்கள் அவர்களுக்கு தேவையானவர்களுக்கு வழங்குவதே அதிகமாக உள்ளது. சமுர்த்தி பயன்பெறும் பயனாளிகளுக்கு, யாருக்கும் தெரியாமல் வங்கிக்கு வந்து விடுங்கள் என்று கூறுகின்றனர். 3 மாதங்களுக்கு ஒரு தடைவ தான் அத்தொகை வழங்கப்படுகின்றது. மாதம் 2500.00ரூபா பெறும் ஒருவருக்கு 3 மாதங்களுக்கு 7500.00ரூபா பெற முடியும். ஆனால் 5000.00ரூபாவினை கொடுத்து விட்டு 2500.00 வங்கி கணக்கிலே வைக்க வேண்டும். தங்களின் பேரப்பிள்ளைகளுக்கு வங்கி கணக்கு திறக்க வேண்டும் என்று கூறுகின்றனர். வருமானம் குறைந்தவர்களுக்கு தான் இப்பயன் வழங்கப்படுகின்றது, அதனையும் முறையாக வழங்க முடியாவிட்டால் அது தேவையில்லை முழுமையாக சமுர்த்தி பயனாளிகளுக்கு அவர்களின் பயனை பெற்றுதர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். சற்று முன் கௌரவ உறுப்பினர்கள் 70வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2000.00ரூபா கொடுப்பனவு வழங்குதல் தொடர்பாக கூறினர். 2019ம் ஆண்டு 03ம் சபையமர்வில் அவ்விடயத்தை நான் பிரேரணையாக கொண்டு வந்திருந்தேன். அந்த வயோதிபவர்களுக்கு முன்பே காட்மோரில் இருந்து வந்தால் முச்சக்கரவண்டிக்கு 1500.00ரூபா வழங்க வேண்டும். இவர்களுக்கு வழங்கப்படுவது 1400.00, 1500.00 முச்சக்கரவண்டிக்கு செலுத்திவிட்டு மிச்ச 400.00வில் மரக்கறியும் பாணும் வாங்கி செல்லவேண்டிய நிலை இருந்தது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தபால் சேவை ஊழியர்கள் உள்ளனர், அவர்களினூடாக அந்த கொடுப்பனவினை கொண்டு செல்ல வேண்டும் என தீர்மானம் எடுத்திருந்தோம், இதுவரையிலும் அது நடைபெறவில்லை, மீண்டும் இப்பிரேரணை முன்வைக்கப்பட்டுளது, தற்போதாவது இதற்கான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

கௌரவ தவிசாளர் அவர்களே, சமூர்த்தி பயனாளி குடும்பங்கள் தொடர்பில் கலந்துரையாடும் போது கூற வேண்டும், மஸ்கெலியா நகரத்தில் சமூர்த்தி பயனாளி குடும்பங்கள் தேர்வு செய்யும் போது அச்சந்தர்ப்பத்தில் அவ்விடத்தில் நானும் இருந்தேன். சமுர்த்தி வங்கி ஊடாக பாரிய கடன் தொகை வழங்கப்படுகின்றது. அதாவது மூன்று லட்சம், ஒன்றரை லட்சம், ஒரு லட்சம் போன்ற கடன் தொகைகள் வழங்கப்படுகின்றன. சாதாரணமாக அவை நகரத்தில் உள்ளவர்களுக்காக வழங்கப்படுகின்றது. நான் நினைக்கின்றேன் கேஸ் மற்றும் கேஸ் அடுப்பு போன்றவற்றையும் பெற்றுக் கொடுத்துள்ளனர். நகரத்தில்

உள்ளவர்களுக்கு மாத்திரம்தான் இவ்வாறான சலுகைகள் கிடைக்கின்றன. எமது தோட்டப்புறங்களில் வாழ்பவர்களுக்கு இவ்வாறு கிடைப்பதில்லை. தாங்களும் நானும் மஸ்கெலியா நகரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமுர்தி சந்தை ஒன்றிற்க்கு நோர்வூட் நகருக்கு சென்றிருந்தோம். பெரும்பாலும் அவர்களுக்கு தங்களது வியாபாரங்களை மேம்படுத்திக் கொள்வதற்காக அவ்வாறான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கே பாரிய பிரச்சினையாக காணப்படுவது உத்தியோகத்தர்களின் பிரச்சினை தான். கௌரவ உறுப்பினர் கூறியது போன்று சமூர்த்தி சமூகம் ஒன்றை உருவாக்கிக் கொண்டு அதன் மூலம் தோட்டத்திற்கான தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். உங்களுக்கு சமுர்த்தி தேவை எனின் 2000.00 ம் ரூபாய் செலுத்தினால் அவர் சமுர்த்தி பயனாளியாக இணைத்து கொள்ளப்படுவார். உத்தியோகத்தர்கள் தவறிழைப்பதால் தான் கிடைக்க வேண்டியவருக்கு கிடைக்காமல் போகின்றது. எனவே அவ்விடத்திலிருந்து தான் நாம் ஆரம்பிக்க வேண்டும். கிடைக்க வேண்டியவருக்கு எவ்வாறு கிடைக்காமல் போகின்றது என்பதை கண்டறிய கௌரவ தவிசாளர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வது, பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற குழுக் கூட்டங்களின் போது இப்பிரச்சினை தொடர்பில் எடுத்துரைத்து, அங்குள்ள ஒரு உத்தியோகத்தர் ஊடாக பிரிவில் உள்ள சமூர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் வேறொரு கிராமத்திலிருந்து இங்கே வந்து கடமையை செய்யும் போது இங்கு காணப்படும் குறைபாடுகள் அவருக்கு தெரியாது. அவர் அந்த சமூகத்திலே காணப்படுகின்ற தலைவரிடம் தான் கேட்டு தெரிந்து கொள்வார். பின்னர் கௌரவ உறுப்பினர் கூறியது போல குடும்ப உறவுகளுக்கிடையே அதனை பங்கிட்டுக் கொள்வர். .மஸ்கெலியா நகரத்திலே கடைகள் வைத்துள்ளவர்களுக்கும் சமுர்த்தி கிடைக்கின்றது. தேவையானவர்களுக்கு அவை பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இப்போதும் அது நடைபெறுகின்றது. ஒரு சில வீடுகளில் இருவருக்குமே சமுர்த்தி இருக்கின்றது. முதியோர் கொடுப்பனவும் கிடைக்கின்றது. இல்லாதவர்க்கு எதுவும் இல்லை. அவ்வாறு தான் நடைபெறுகின்றது. எனவே இவ்விபரங்களை சமர்ப்பித்து அங்கிருந்து ஒரு அதிகாரியை கொண்டு வந்து அந்தந்த வட்டாரங்களில் காணப்படுகின்ற, தாங்கள் கூறியது போன்று தகவல் படிவத்தில் இருக்கின்ற பெயர்கள் சமூர்த்தி பயனாளிகளா என்பதை தேடி பார்த்து நடைமுறைப்படுத்தினால் இப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என நான் நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்கள் முன்னாள் நிதியமைச்சர் வழங்கிய வேலைத்திட்டத்திற்கு நன்றி கூறியிருந்தார், அதே வேலைத்திட்டத்தில் ஆரம்ப கட்டமாக வேலையை ஆரம்பிக்க கூறினார். நாங்கள் வேலையை முடித்துக்கொடுத்தோம், ஆனால் அதற்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை, சபையினூடாக தான் இவ்வேலைத்திட்டம் வழிநடத்தப்பட்டது, நாங்கள் இவ்விடயத்தில் பாரிய பிரச்சினைக்கு மத்தியில் உள்ளோம். எனவே இதனையும் பிரதேச அபிவிருத்தி தலைவரின் கவனத்திற்கு தாங்கள் கொண்டு செல்ல வேண்டும், அவரால் இந்த பொருட்களை பெற்றுக்கொடுக்க முடியுமாக இருந்தால் ஏன் இவ்வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க முடியாது, எனவே இவ்விடயத்திற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள் (ஐ.ம.சு.மு)**

மஸ்கெலியா நகரில் சமுர்த்தி வங்கியொன்றை கொண்டுவரவேண்டும் என்று கடந்த சபைகளில் உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர், மஸ்கெலியாவில் இவ்வங்கி இயங்குகின்றதா இல்லையா என்பது கேள்விக்குறி. ஏனென்றால் கடந்த 28ம் திகதி மறே, சீத்தகங்குல, மவுசாக்கலை ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்கள் சமுரத்தி தொகையை பெற பெரும்பாடுபட்டு தான் செல்கின்றனர். இப்பிரேரணையுடன் மஸ்கெலியா சமுர்த்தி வங்கி தொடர்பாகவும் தவிசாளர் அவர்கள் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியாவில் 05 மாதங்களுக்கு முன் சமுர்த்தி வங்கி ஆரம்பிக்கப்பட்டு விட்டது, 4,5 உத்தியோகத்தர்கள் வந்து செல்கின்றனர், வங்கி கட்டிடமாக மாத்திரமே உள்ளது.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தன் அவர்கள் கூறியது போல நானும் எமில்டன் தோட்டத்தில் 04 இலட்சம் ரூபா பெறுமதியான கொங்கீறீட் பாதை செப்பனிடல் வேலைத்திட்டத்தை செய்துள்ளேன், வாழமலை கோவிலில் மதிலொன்றை கட்டியுள்ளேன், கடந்த வருடம் டிசம்பர் மாதம் இவ்வவேலைத்திட்டங்களை முடித்துவிட்டேன் அதற்கான நிதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை, இது தொடர்பாக பிரதேச செயலாளரிடம் வினவிய போது கூடிய விரைவில் அதற்கான நிதியை பெற்றுத்தருவதாக கூறியுள்ளார்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

சமுர்த்தி வங்கியினை திறந்து அதற்காகவும் மாதாந்த கூலி ஒன்றை செலுத்துகின்றோம் என நான் நினைக்கின்றேன். அதற்காகவும் சமூர்த்தி அதிகார சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வையுங்கள். இன்னும் ஒன்று உள்ளது. நாம் கடந்த வருடத்திற்கு முந்திய வருடம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தோம். அப்போது நாம் 20 லட்சம் பெறுமதியான கட்டிடம் ஒன்றை மேலே செய்துள்ளோம். அந்த கட்டிடத்தில் இருந்து அதற்கான கூலி கிடைக்குமாக இருந்தால் அந்த சமுர்த்தி வங்கி ஊடாக அவ்விடத்திற்கு ஏதாவது ஒரு தொகையினை செலுத்தி அதனை சமூர்த்தி வங்கியாகவோ திறந்து விடலாம். அவ்விடத்தில் பணம் வீண் விரையம் ஆகிறது. சேவை ஒன்று கிடைப்பதில்லை. பணமும் இல்லை. எனவே கௌரவ தவிசாளர் அவர்களே தாங்கள் இவ்விடயம் தொடர்பில் அந்த நிறுவனத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி இவ்விடயம் தொடர்பாக சபையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவியுங்கள்.

பொது மக்களின் பணம். கட்டிடத்தில் வேலைகள் பூர்த்தியாகி உள்ளன. கதவுகளையும் யன்னல்களையும் பொருத்தும் வேலை மாத்திரம் தான் எஞ்சியுள்ளது. அவர்கள் மாதாந்தம் கூலியினை செலுத்துவார்கள், அதற்கான முற்பணம் ஒன்றையும் செலுத்துவார்கள் அல்லவா? அதிலிருந்து அதனை பூர்த்தி செய்து பொதுமக்களுக்காக அங்கே இருக்க முடியும். அப்போது அவ்விடத்தில் உத்தியோகத்தர் ஒருவர் இருப்பார் அல்லவா.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

நாம் இந்த 450.00ரூபா கூப்பன் தொடர்பாக பேசுகின்றோம், அதேபோல ஊனமுற்றோர் என்ற பிரிவின் கீழ் 300.00, 350.00 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது, இதனால் எந்த பயனும் இல்லை, எனவே இது தொடர்பாகவும் அரசாங்க அதிபருக்கோ அல்லது நிதியமைச்சுக்கோ தான் தெரிவிக்க வேண்டும். இருதய நோயாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு வெறும் 150.00தான் எனவே இவை அனைத்தும் அதிகரிக்கப்பட வேண்டும்.

**தீர்மான இல 09**

450.00ரூபா கூப்பன் விடயம் தொடர்பான பிரேரணைக்கு அமைய பிரதேச, மாவட்ட செயலாளர்களுக்கும், சமுர்த்தி அதிகார சபைக்கும், சமுர்த்தி முகாமையாளருக்கும் கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மான இல 10**

முதியோர் கொடுப்பனவினை தபால் உத்தியோகத்தகரினூடாக விநியோகிப்பது தொடர்பான விடயத்திற்கு உரிய இடத்திற்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மான இல 11**

சமுர்த்தி வங்கி கட்டிடம் தொடர்பான விடயத்திற்கு சமுர்த்தி பணிப்பாளருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த 4,05 மாதங்களாகவே நிறைய பொருளாதார சிக்கலுக்கு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர். மக்கள் வரிசைகளில் நின்ற வண்ணமே உள்ளனர். கடந்த மாதம் 19ம் திகதி மஸ்கெலியாவில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணை விநியோகிக்கப்பட்டது, அதனை பெற்றுக்கொள்ள நிறைய மக்கள் வருகை தந்திருந்தனர். அங்கிருந்த சில இளைஞர்களினால் பாரிய குழப்பநிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. மஸ்கெலியா நகரமொன்பது 13 கிராம சேவகர் பிரிவுகளுக்கு பொதுவானது. நகரத்திலுள்ளவர்கள் தோட்டப்புற மக்களை மிகவும் கீழ்தரமாக நடத்தியுள்ளனர். அதாவது "தோட்டகாட்டான்" என்று கூறியுள்ளனர். எனது தாய் தந்தையும் தோட்டத்தில் வேலை செய்தவர்கள் தான், நானும் தோட்டத்தில் தான் வேலை செய்கின்றேன். மக்கள் வாக்களித்து கடந்த 04, 05 வரடங்களாக பிரதேச சபை உறுப்பினராக உள்ளேன். குறித்த நேரத்திலே அவதூறாக பேசியுள்ளனர். தோட்டத்தில் உள்ளவர்களும் இந்த நகரத்தில் வர்த்தகர்களாக உள்ளனர். "தோட்டகாட்டான்" என்று கூறிய விடயத்தை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். சமூக வலைத்தளங்களிலும் மிகவும் அவதூறான பதிவுகளை

வெளியிட்டுள்ளனர். தோட்டத்தில் உள்ளவர்கள் எதிலும் தாழ்ந்தவர்கள் இல்லை. நகரத்திலுள்ளவர்களுக்கு இணையாக வசதியானவர்கள் தோட்டப்புறங்களில் உள்ளனர். இனிவருங்காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற கூடாது. நடந்த இவ்விடயத்திற்கு சபையினூடாக நான் பாரிய கண்டணத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்விடயம் தொடர்பாக நிறைய பேர் தமது எதிர்ப்பை வெளிகாட்ட போவதாக கூறியிருந்தனர். நாமும் அவ்வாறு செய்யக்கூடாது என்று அவர்களிடம் நான் கூறியிருந்தேன், நான் நினைத்திருந்தால் மஸ்கெலியாவில் அன்று பாரிய ஆர்ப்பாட்டமொன்றை செய்திருக்கலாம், நிறைய பேர் எனக்கு ஆதரவளிக்க தயாராக இருந்தனர், எனினும் நான் அவ்வாறு செய்யவில்லை. இனிவருங்காலங்களில் பொது இடங்களில் மிகவும் கவனமாக பேச வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் நித்தியானந்தன் அவர்கள் "தோட்டகாட்டான்" என்று கூறிய விடயம் அவருக்கு மனவேதனையை அளித்ததாக கூறியிருந்தார். அவ்விடயத்தை மாற்றி பார்த்தால் காட்டை தோட்டமாக மாற்றியவர்கள் தான் நாம். இன்று எமக்குள்ள வசதிகள் நகரத்தில் உள்ளவர்களுக்கு இல்லை. இன்று வெறும் அரிசி மட்டும் கிடைத்தாலே தோட்டப்புற மக்களுக்கு போதுமானது, இன்று மண்ணெண்ணைக்கும் எரிவாயுவிற்கும் நகர்புற மக்கள் தான் வரிசையில் நிற்கின்றனர், தோட்டப்பறமக்கள் இல்லை. நாங்கள் தற்போது தோட்டப்புறங்களில் வாழ்நதாலும் அது எங்களுக்கு ஒரு சுகமான வாழ்க்கையாகவே உள்ளது. எங்களுக்கு எல்லாம் இலவசமாக கிடைக்கின்றது. தோட்டப்புறத்திற்கு வந்து பார்த்தால் இங்கு இப்படிப்பட்ட சொகுசு வாழ்க்கை உள்ளதா என்பது தெரியும். இன்று நகரத்தில் உள்ளவர்கள் உணவருந்த காரணம் நாங்கள் தான். எனவே நகரத்திலுள்ளவர்கள் இவ்வாறான வார்த்தை பிரயோகங்களை மறந்து விடவும். நாங்கள் உங்களை விமர்சிக்கின்ற காலம் வெகு தொலைவில் இல்லை. இன்று மஸ்கெலியா பிரதேச சபை இயங்குகின்றதென்றால் அதற்கு தோட்டப்புறங்கள் தான் காரணம். தோட்டப்புறங்களை மையமாக கொண்ட 09 வட்டாரங்கள் உள்ளன. ஆனால் இந்த சபையின் முழுமையான பலனை பெறுவது நகரத்தில் உள்ளவர்கள் மட்டும் தான். இச்சபையில் இதுவரையில் தோட்டப்பறங்களில் இருந்து ஏதும் முறைப்பாடுகள் முன்வைக்கபட்டுள்ளதா? நாம் சென்று பார்த்துள்ளோமா? எனவே இவ்வாறான விடயங்களை வன்மையாக கண்டிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

என்னை பொருத்த வரையில் " தோட்டகாட்டான் " என்பது அவமானம் இல்லை, எங்களது அடையாளம். இங்குள்ள அனைவருமே தோட்டப்பறத்தை சேர்ந்தவர்கள் தான் மஸ்கெலியாவை பொருத்த வரையில் இன, மத, மொழி பேதமென்ற ஒன்று இல்லை. மஸ்கெலியாவில் அவ்வாறு ஒருவர் இரண்டு பேர் பேசினர் அதற்கான தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையை மேலும் கொண்டு செல்லாமல் இதற்கான முடிவை அவரவர்கள் சரியாக பயன்படுத்திக் கொண்டால் சரி, எரிபொருள் தொடர்பாக ஒரு விடயத்தை பேசியிருந்தார், அவசர தேவை நிமித்தம் எரிபொருள் வழங்குவதாக தெரிவித்திருந்தனர் ஆனால் தற்போது தவிசாளர் அவர்களுக்கே எரிபொருள் இல்லை. அவசர நிமித்தம் எரிபொருள் இல்லாத சந்தர்ப்பத்தில் தோட்டப்புறங்களிலுள்ள மக்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர் அவசர சேவை நிமித்தம், தூர தோட்டப்பிரதேசங்களில் வைத்திய தேவை காரணமாக நகரத்திற்கு வரவேண்டும் என்றால் எங்களுக்கு உள்ள ஒரே வழி 1990 மட்டும் தான் , சாமிமலை பகுதியில் ஒரு அவசரம் என்று கூறும் போது 1990 வண்டி நல்லதண்ணி பக்கம் சென்றுவிட்டால் அந்த வாகனத்தை இங்கு எடுக்க முடியாது, ஒரே நேரத்தில் 03 தொலைபேசி அழைப்பு வரலாம் எனவே அவர்கள் எங்கு செல்வது என்று குழப்பமாகும், ஒரு தோட்டத்தில் 02 முச்சக்கரவண்டிக்கு சரி இவ்வாறான தேவைகளுக்கு பெற்றோலை பெற்றுக்கொடுத்தால் அவசர நிமித்தம் அது நன்மையாக அமையும். நானும் இது தொடர்பாக பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருந்தேன், இவ்விடயத்திலே அது தொடர்பாக பேசி தீர்மானமொன்றை எடுக்கலாமென நினைக்கின்றேன், அவசர தேவை கருதி இவ்விடயங்களை தெளிவுப்படுத்தி பிரதேச செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பவும்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

அண்மையில் ஸ்டொக்கம் வட்டாரத்தில் ஒரே நாளில் 02 பேரிற்கு சுகயீனம் காரணமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது, அதில் ஒருவர் இறந்து விட்டார், அதேபோல வேறொரு இடத்திலிருந்து புளும்பீல்ட் பிரதேசத்திற்கு வந்திருந்த ஒருவர் இறந்து விட்டார், நாம் ஏதாவதொரு அசம்பாவிதம் நடக்கும் முன் முன்னாயத்தமாக வேலைகளை செய்ய வேண்டும். இச்சூழ்நிலை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என தெரியாது, நான் எனது தோட்ட முகாமையாளருடன் தொடர்புகொண்டு ஒரு வட்டாரத்தில் ஒரு முச்சக்கரவண்டியை அவசர தேவைக்காக நியமித்து வைக்கும் படி கேட்டிருந்தேன், அதற்கு அவர் ஒத்துழைப்பு வழங்கினார். எனினும் வட்டாரத்திலுள்ள வண்டி உரிமையாளர்கள் ஒத்துக்கொள்ளவில்லைஈ ஏனென்றால் அதற்கான கொடுப்பனவுகள் கிடைக்க தாமதமாகும் என்பதற்காக, பின்னர் மீண்டும் நினைவுப்படுத்தல் கடிதமொன்றை தோட்ட முகாமையாளருக்கு அனுப்பினேன். இவ்வாறு

அனைத்து வட்டார உறுப்பினர்களும் ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் இப்பிரச்சினைக்கான சிறந்த தீர்வை பெறலாம்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

காட்மோர் என்பது மஸ்கெலியாவில் இருந்து வெகு தொலைவில் உள்ள பிரதேசம், அரசாங்கம் எரிபொருள் அத்தியாவசிய சேவைகளுக்காக டிப்போவினூடாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது, இருந்த போதிலும் எமது காட்மோர் பிரதேசத்திலே இந்த வாரம் செல்கின்ற பஸ் அடுத்த வாரம் தான் எரிபொருளை நிரப்பிக்கொண்டு வருகின்றது, அரச டிப்போவில் எரிபொருள் நிரப்பும் போது அரச வாகனத்திற்கு தினமும் எரிபொருளை நிரப்ப முடியும். ஏனைய அரச வாகனங்கள் வழமைபோல சேவையில் ஈடுபடுகின்றன. எங்களுடைய காட்மோர் பிரதேசத்திற்கு செல்லும் அரச பேரூந்து தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுவது இல்லை. கடந்த வாரம் ஒரு பெண்மணி தேயிலை தோட்டத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி குயின்ஸ்லேன்ட் வழியாக நடைபாதை வழியாக தான் வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர். அப்பிரதேசத்தில் ஒரு வாகனத்திற்கு கூட எரிபொருள் கிடையாது. தோட்ட நிர்வாகமும் வைத்தியசேவையை குறைத்துள்ளது. அரச சேவையில் ஈடுபடும் இந்த பஸ்ஸாவது சேவையில் ஈடுபடுமான இருந்தால் நன்மையாக அமையும். ஒன்று காட்மோர் பிரதேசத்திற்கு சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருளை சீராக வழங்க வேண்டும். இல்லை என்றால் அரச சேவையை சரியாக செய்ய வேண்டும். கேட்டால் டயர் இல்லை என்று கூறுகின்றார்கள். டயர் உள்ள வாகனத்திற்கு எரிபொருளை வழங்கினால் அது சேவையில் ஈடுபடும் தானே? உடனடியாக இதற்கு நாம் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். என்னுடைய வட்டாரத்தில் 4000, 5000 குடும்பங்கள் உள்ளன. நான் ஒரு பிரதேச சபை உறுப்பினர் என்னிடம் வேன் ஒன்று உள்ளது, சபை மூலமாக அத்தியாவசிய சேவைக்கென சபை மூலமாக கடிதமொன்றை டிப்போவிற்கு வழங்கினால் என்னுடைய வட்டாரத்திலுள்ள அவசர தேவைக்கு என்னுடைய வாகனத்தை பயன்படுத்துவேன், என்னுடைய வாகனத்தில் 15 வருடத்தில் 1000ற்கு மேல் வைத்திய சேவைக்காக உதவிகளை வழங்கியுள்ளேன். இவ்வாறான சேவைகளை செய்துள்ளேன். ஏதாவதொரு அவசரமென்றால் எனக்குதான் தொலைபேசியில் தொடர்பு கொள்கின்றனர்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

எனது வட்டாரத்திலுள்ள அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு 04 வாகனங்களுக்கு நான் எரிபொருளை பெற்றுக்கொடுத்துள்ளேன், அத்துடன் எரிபொருள் தொடர்பாக நிறைய மோசடிகள் நடைபெறுகின்றது. எமது உறுப்பினர் கூறியது போல காட்மோர், மறே பிரதேசங்களுக்கு கட்டாயம் அரச சேவை பஸ் ஒன்று வேண்டும் எனவே இது தொடர்பாக உரிய இடத்திற்கு கடிதனுப்பவும்.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எரிபொருள் வழங்க சொல்லி கூறியிருந்தனர், எனினும் அது மஸ்கெலியா எரிபொருள் நிலையத்தில் மறுக்கப்பட்டு விட்டது, எனவே இனிவருங் காலங்களில் இவ்வாறான அத்தியாவசிய சேவைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். மஸ்கெலியாவிற்கு வரும் டீசல் எங்கு செல்கின்றதென்றே என்றே தெரியவில்லை. மத்தியமாகாண தனியார் போக்குவரத்து ஆணையாளர் அவர்களுக்கு இப்பிரதேசங்களுக்கான பஸ் கட்டணமாக நிரந்தரமான ஒரு கட்டணத்தை நிர்ணயிக்குமாறு கூற வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அண்மையில் நாம் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களுடன் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தோம். அக்கூட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பல்நோக்கு கூட்டுறவு சங்க கிளைகளுக்கு 200லீற்றர் மண்ணெண்ணை வழங்குவதாக கூறப்பட்டது, எனினும் அவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படவில்லை, இதை நம்பி நாம் மக்களுக்கும் வாக்குறுதி கொடுத்துள்ளோம். மீண்டும் இவ்விடயத்தை நினைப்படுத்த வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இது தொடர்பாக நேரடியாக சென்று கதைத்து வந்துள்ளேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அசாதாரண சூழ்நிலை காரணமாக வாகன சாரதிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர், அதனை அவர்கள் சார்பாக பயன்படுத்திக்கொண்டு பேரூந்து கட்டணத்தை அவர்களுக்கு ஏற்றாற் போல நிர்ணயிப்பது பிழை. மறே

வட்டாரத்தை பொருத்த வரை வளதலை, கெடஸ், ராஜமலை போன்ற பிரதேசங்களுக்கு மிகவும் மோசமாக உள்ளது, ஒரு மாணவனுக்கு வளதலையில் இருந்து மஸ்கெலியாவிற்கு வந்து போக ஒரு நாளைக்கு 400.00ரூபா செல்கின்றது, மாணவர்கள், பாடசாலைக்கு வருவது குறைவு, மாணவர்களை வேறு பாடசாலைக்கு மாற்ற பெற்றோர்கள் வந்து கேட்கின்றனர். பயணச்சீட்டை வழங்குமாறு தனியார் போக்குவரத்து துறைக்கு அறிவித்தல் ஒன்றை வழங்கவும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

போக்குவரத்து துறைக்கு கடிதமனுப்பினால், அவர்கள் வரும் தினத்தன்று எப்படியோ தெரிந்து விடுகின்றது, அவர்கள் வரும்போது மாத்திரம் பயணச்சீட்டை வழங்கிவிடுகின்றனர். மக்களும் இவற்றை கேட்பது இல்லை. மத்திய மாகாண போக்குவரத்து சபையினால் பயணச்சீட்டு புத்தகமும் வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அண்மையில் சமூக வலைத்தளத்தினூடாக பதியப்பட்ட சம்பவங்கள், அண்மையில் எரிபொருள் விநியோகம் தொடர்பாக அனைவரையும் அழைத்து கூட்டமொன்றை நடாத்தியிருந்தோம். பொலிசாருடன் நானும் நேரடியாக வாத பிரதிவாதங்களில் ஈடுபட கூடிய நிலையும் கூட ஏற்பட்டிருந்தது. அன்றைய தினத்திற்கு மறுநாள் மண்ணெண்ணை விநியோகம் செய்யப்பட்டது. அன்றைய தினம் அதிகாலை 03 மணியளவில் நான் உட்பட இன்னொரு நபரும் இணைந்து ஆசிரியர்களுக்காகவும் பிரதேசத்தில் உள்ளவர்களுக்காகவும் 56 கொள்கலன்களை போட்டிருந்தோம். அன்றைய தினம் அனைத்து ஆசிரியர்களும் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று நிற்கும் போது அங்கு பேசப்பட்ட வார்த்தைகள் மிகவும் அநாகரியாமாக இருந்தது, அவ்விடயத்தில் கூட்டுறவு சங்கத்திலுள்ள யாரும், நாங்கள் தான் கூறியிருந்தோம் என்றவொரு விடயத்தை கூறவில்லை. இது சமூகத்தில் நடைபெற்ற ஒரு இழிவான செயலாகவே உள்ளது. அத்துடன் எந்த கௌரவ உறுப்பினர்களும் வரிசைக்கு வருவதில்லை என்று கூறினர், எரிபொருள் தேவையான உறுப்பினர்கள் வரிசையில் இருந்து தான் அவற்றை பெற்றுக்கொள்கின்றனர், தேவையற்றவர்கள் வரிசைக்கு வர மாட்டார்கள் என்று நான் அங்கு கூறினேன். குறிப்பிட்ட நபர்களுக்கு மாத்திரமே அனைத்து பொருட்களும் இலகுவாக கிடைக்கின்றது. இவற்றுக்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் இரவு வேளைகளில் எரிபொருள் பெற்று செல்வது தடுக்கப்படும். பதியப்பட்ட வாகனங்களின் பட்டியலை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவரிடம் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேளுங்கள் அப்படி ஒரு பட்டியல் இருக்காது. மஸ்கெலியாவில் டீசல் பெற்றோல் வேறு எங்கும் தேட தேவையில்லை, “சம்பத்” கடையிலும், பொலிஸ் நிலையத்தின் உள்ளும் உள்ளது, அங்கு விற்பனை செய்யப்படுகின்றது. இங்கு நடைபெறும் பிரச்சினைகளுக்கு மஸ்கெலியா பொலிஸ் நிலையமும் உடந்தையும் கூட. அத்துடன் இந்த பயணச்சீட்டு விடயம் தொடர்பாக நடவடிக்கை ஒன்றை எடுத்தால் நன்றாக இருக்கம். கொழும்பு – அட்டன் 600.00ரூபா தான் ஆனால் மஸ்கெலியா – ராஜமலை 450.00ரூபா அதுவும் மூட்டை ஒன்று போட்டால் 500.00ரூபா. சிறிய குழந்தைகளுக்கு 100.00ரூபா அறவிடுகின்றனர். இவற்றுக்கு நடவடிக்கை எடுக்கவும். இல்லாவிட்டால் தற்போது பாதை காபட் செய்யப்பட்டுள்ளது புதிய பஸ் ஒன்றை சேவைக்கு பெற்றுக்கொடுக்கவும்.

**தீர்மான இல 12**

குறித்த பஸ் போக்குவரத்து விடயம் தொடர்பாக மத்தியமாகாண போக்குவரத்து ஆணையாளருக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மஸ்கெலியாவிற்கு இன்னும் எரிபொருள் வரவில்லை, வந்த பின்னர் தான் இதற்கான நடைமுறை என்னவென்று பார்க்க வேண்டும். அத்துடன் தற்போது நகரங்கள் நவநாகரீகமாக உள்ளதென்றால் அதற்கு தோட்டத்தில் உள்ளவர்கள் தான் காரணம். அம்மக்கள் பொருட்கள் கொள்வனவு செய்யவில்லை என்றால் நகரம் தோட்டத்தை விட மோசமான நிலைக்கு சென்று விடும். வடக்கில் உள்ளவர்கள் “ தோட்டகாட்டான்” என்று வைத்த பேர் தான் இன்றும் உள்ளது. இது பெருமையான விடயம், இப்படியான மக்களும் இங்கு வாழ்ந்துக்கொண்டு தானே உள்ளோம். அன்று நாம் விட்டிருந்தால் பெரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கும். இனிவருங்காலங்களில் பார்ப்போம். நாம் அனைவரும் அங்கிருந்து வந்தவர்கள் தானே? தோட்டத்திலுள்ள நிறைய பேர் நல்ல நிலைமையில் உள்ளனர். நாஸாவில் கூட தொழில் புரிகின்றனர். இந்திய தூதரகத்தில் தோட்டத்தில் பிறந்து வளர்ந்த ஒருவர் உள்ளார், இவை அனைத்தும் பெருமை கொள்ள வேண்டிய விடயம்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

அண்மையில் இலங்கையில் ஒரு தொலைகாட்சி நிகழ்ச்சியில் "தோட்டகாட்டான்" என்று கூறியி விடயத்திற்கு பாரிய பிரச்சினை ஒன்று ஏற்பட்டிருந்து, அதற்கமைவாக அண்மையில் இது தொடர்பாக இந்தியாவில் ஆய்வொன்று செய்யப்பட்டு இலங்கையில் மலையக தமிழர்கள் தான் முதன்முதலில் கல்வி, தொழில் போன்ற விடயங்களுக்கு வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என்ற விடயத்தை கண்டுபிடித்துள்ளனர் என்ற விடயத்தை அண்மையில் ஒரு நடிகர் குறிப்பிட்டிருந்தார். இந்த பெருமை எமது மலையகத்தவர்களையே சாரும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இனிவருங்காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுப்போம். அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தோட்டப்புறங்களில் காணப்படும் கூட்டுறவு சங்கங்களை சிறப்பான முறையில் இயங்க செய்வதன் மூலம் பெருந்தோட்ட மக்கள் ஓரளவு உணவு பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும், அதுமட்டுமல்லாமல் பிரதான கூட்டுறவு சங்கத்தில் தோட்ட பகுதி மக்களையும் உள்வாங்கி அங்கத்துவம் கொடுத்தால் விலை குறைவாக சரியான நிர்ணய விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடிவது தொடர்பானது எனது பிரேரணை ஆகும், அதாவது பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிளைகள் அனைத்து தோட்டப்புறங்களிலும் உள்ளது, அது குறிப்பிட்ட காலப்பகுதியில் சம்பளம் குறைவாக இருந்தாலும் ஒவ்வொரு மாதத்திற்குமான பணத்தை அறவிட்டு கொண்டு மக்களுக்கான பொருட்களை பெற்றுக்கொடுப்பார்கள், தற்போது நிறைய தோட்டப்புறங்களில் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் நடைபெறும் இவ்விடயத்தை நிறுத்தியுள்ளனர். ஓரளவாவது பல்நோக்கு கூட்டுறவு சங்கம் இயங்கும் சந்தரப்பத்தில் அங்குள்ள தோட்ட மக்கள் பயன்பெறுவார்கள். இரண்டாவது விடயம் இந்த பல்நோக்கு கூட்டறவு சங்கத்தில் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தில் தோட்டப்புற மக்களின் அங்கத்துவம் குறைவாக இருப்பதனை விட அதனை ஏற்றுக்கொள்வதற்கான மனப்பாங்கு கூட்டுறவு சங்கத்திற்கு இல்லை என்று தான் கூற வேண்டும். தவிசாளருக்கும் அதில் இன்னும் அங்கத்துவம் வழங்காமல் உள்ளனர். மஸ்கெலியா பகுதியை பொருத்த வரையில் சதோச நிறுவனம் இல்லை, அப்போது அரசாங்கம் நிர்ணயித்த விலையில் பொருட்களை பெற்றுக்கொள்ள கூடியது ஒன்று சதோச, மற்றொன்று கூட்டுறவு சங்கம். எனினும் அங்கத்துவ எண்ணிக்கை மிக குறைவாக உள்ளது, ஆகவே அங்கத்துவ எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். ஒன்று கூட்டுறவு சங்க தலைவரை அழைத்து எந்த அடிப்படையில் அங்கத்துவத்தை எடுகின்றனர் என்று பேசுவோம், இல்லை என்றால் அங்கத்துவம் வழங்க முடியாவிட்டால் பிரதேச செயலாளருக்கு முறைப்பாட்டு கடிதமொன்றை அனுப்புங்கள். அடுத்த விடயம் தோட்டப்புறங்களிலுள்ள கூட்டுறவு சங்கத்தை மீண்டும் ஒரு இயக்கத்திற்கு கொண்டுவர பிளான்டேசன் முகாமையாளருக்கு கடிதமொன்றை தயாரிக்கவும். இவ்வாறான விடயங்களை தற்போது செய்து கொடுத்தால் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் கூறியது போல அனைத்து தோட்டப்புறங்களிலும் கூட்டுறவு சங்கம் உள்ளது தோட்ட நிர்வாகம் நினைத்தால் அவற்றை செயற்படுத்தி கொடுக்கலாம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஒரு சில இடங்களில் தோட்ட நிர்வாகம் சரியாக செய்கின்றது ஒவ்வொரு இடங்களில் தான் பிரச்சினை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

முன்னர் தோட்ட நிர்வாகங்களினால் மக்களுக்கு ஒவ்வொரு அவசர தேவைகள் நிமித்தம் போக்குவரத்து போன்ற சலுகைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது, தற்போது அவை இல்லை. ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொரு வகையில் செயற்படுகின்றனர். அண்மையில் வழங்கப்பட்ட நிவாரண பொருட்களை கூட நாங்கள் கட்டணம் செலுத்தி கொண்டு வந்தோம். மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றது. மஸ்கெலியா, குடா மஸ்கெலியாவிற்கு இன்னும் நிவாரண பொருட்கள் கொண்டு வந்து சேரவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இது தொடர்பாக கடிதம் அனுப்பியுள்ளோம்.

**தீர்மான இல 13**

மேற்குறித்த பிரேரணை தொடர்பாக குறித்த இடங்களுக்கு கடிதமனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் வசந்தகுமார் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

சாமிமலை பிரதேசத்தில் கடந்த 40 வருடத்திற்கு மேலாக இயங்கி வந்த கூட்டுறவு சங்க கடை தனியார் ஒருவருக்கு விற்கப்பட்ட சூழ்நிலையில் இதன் பிறகு சாமிமலை பன்சலையிற்கு முன்னால் இருந்த தரிசு நிலத்தில் கடந்த 05 வருடங்களுக்கு மேல் கட்டப்பட்ட கூட்டுறவு சங்க கடை கட்டிடம் இயங்காமல் இதனை கூட்டுறவு சங்கம் வேறொரு நபருக்கு வாடகைக்கு வழங்கியுள்ளது. இதனால் சாமிமலை பிரதேச மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். மக்கள் படும் பிரச்சினைகளை பார்த்துக்கொண்டு சாமிமலை உறுப்பினர்கள் சேர்ந்து சுயமாக ஒரு கூட்டுறவு கடையை உருவாக்க வேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்டு மக்கள் சேவைக்காக இன்று 06.06.2022 புதிய கூட்டுறவு சங்க கடையை திறந்து வைக்கின்றனர். இவர்களுக்கு பாராட்ட தெரிவிக்கும் அதேவேளை இந்த கூட்டுறவு சங்க கடை நடத்த தெரிவு செய்யப்பட்ட இடம் கூலிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டதே. எனவே இதுவும் எதிர்காலத்தில் கூலி செலுத்துவது ஒரு சுமையே மக்களுக்காக கட்டப்பட்ட கூட்டுறவு சங்க கடை இருக்கும போது கூலிக்கு கட்டிடம் பெற்று கூலிக்கு கூட்டுறவு சங்க கடையை நடாத்த வேண்டுமா என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதற்கான தீர்வை எமது பிரதேச தவிசாளர் என்ற வகையில் தாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன், தாங்களும் தவறினால் இதற்காக மக்கள் எழுச்சி போராட்டம் வெடிக்கும் என என்னால் உணரமுடிகின்றது, எனவே தயவு செய்து உரிய முறையில் தயவு செய்து இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இதற்கு பலதடவை கடிதமனுப்பி, அண்மையில் காணி சீர்திருத்த ஆணைக்குழு காரியாலயத்திற்கு சென்ற போது கூட இவ்விடயத்தை நினைவுப்படுத்தினேன். இவ்விடத்தை பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் சபைக்கு வழங்குமாறு கூறியிருந்தனர். இதற்கான உரிய நடவடிக்கையை நான் எடுக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து இவ்விடயம் தொடர்பாக நான் சபையில் பேசி வருகின்றேன், கூட்டுறவு சங்க உறுப்பினராக இருந்து மக்கள் சார்பாக பேசியதனால் எனக்கு வந்த கடனை கூட நிறுத்தி வைத்துள்ளனர். சாமிமலையில் நிறைய இடங்களை விற்றுள்ளனர். தபால் நிலையம் மாதம் 5000.00ரூபா வாடகைக்கு உள்ளது. எனவே இவற்றுக்கான கடினமாக நடவடிக்கையை சபை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**